திருவண்ணாமலை வணிகவரி மாவட்ட துணை ஆணையர்(மாநிலவரி)(முகூபொ) அவர்களின் செயல்முறைகள் முன்னிலை – திருமதி. ஞா. நந்தினி,

நக.அ1/7448/2018 நாள் : .11.2019.

பொருள்: பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - திருவண்ணாமலை வணிகவரி மாவட்டம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நேர்முகதேர்வு அல்லாத ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள் - 2017-18 மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட உதவியாளர் - திருமதி.ம.இரமா, உதவியாளர் - பணிவரன்முறை ஆணை வழங்குதல் - தொடர்பாக.

உதவி ஆணையர் அலுவலகம்
20 DEC 2019
1064
திருப்பத்தூர், (வே.மா.)

பார்வை: 1) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-6 கடித எண்: 6002/PSD-D/2018 நாள்: 30.10.2018.

2) இணை ஆணையர்(மாநிலவரி), வேலூர் அவர்களின் செயல்முறைகள் நக.ஆ2/7825/2018-2, நாள்: 11.12.2018.

*******

**ஆணை:**

பார்வை ஒன்றில் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நேர்முகதேர்வு அல்லாத ஒருங்கிணைந்த சார்நிலைப்பணிகள்-1 2017-18 மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வை இரண்டில் காணும் செயல்முறைகளின்படி திருவண்ணாமலை வணிகவரி மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு திருப்பத்தூர் உதவி ஆணையர்(மாநிலவரி) அலுவலகத்தில் உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட திருமதி.ம.இரமா, என்ற உதவியாளருக்கு அவர் பணியில் சேர்ந்த நாளான 18.12.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தும் தகுதி காண் பருவம் தொடங்கியும் ஆணை வழங்கப்படுகிறது.

இப்பணியாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியாக மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதி காண் பருவத்தில் இருக்க வேண்டும் எனவும் தகுதி காண் பருவ காலத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் வணிகவரித்துறை சட்டங்கள் பகுதி–I, II தேர்விலும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சிபெறவேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டும் ஆணையிடப்படுகிறது.

18.11.19

துணை ஆணையர்(மாநிலவரி)(முகூபொ),
திருவண்ணாமலை.

பெறுநர்
திருமதி.ம.இரமா,
உதவியாளர்,
உதவி ஆணையர்(மாநிலவரி) அலுவலகம்,
திருப்பத்தூர்.

18/11/19

நகல்: உதவி ஆணையர்(மாநிலவரி) அலுவலகம், திருப்பத்தூர்.
நகல் - இணை ஆணையர்(வணிகவரி), வேலூர் கோட்டம், வேலூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.